Paper ID: AL18

# அறபு மத்ரஸாக்களில் பாடசாலைக் கல்வி விதானத்தைக் கற்றுக்கொள்வதில் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் : காலி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அறபு மத்ரஸாக்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

**M.H.Ikram Mohamed [1], K.M.Shaheem [2]**

[1]Faculty of Islamic studies and Arabic language, south eastern university of Sri Lanka.
[2]Faculty of Islamic studies and Arabic language, south eastern university of Sri Lanka
ikrammohamedabbasi1@gmail.com, shaheemmuslim@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை முஸ்லிம்களுக்கு மத்தியில் இஸ்லாமிய அறிவினை விருத்தி செய்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி பெரும் பங்காற்றிய பெருமை அறபு மத்ரஸாக்களையே சாரும். மூடநம்பிக்கையிலும், மௌட்டீகத்திலும் மூழ்கிக்கிடந்த மக்களுக்கு இஸ்லாமிய மார்க்க விளக்கங்களை வழங்கி இஸ்லாமிய மார்க்கத்தைக் கற்றறிந்த அறிஞர்களை உருவாக்க இவ்வறபு மத்ரஸாக்களே காரணியாகத் திகழ்ந்தன. இம்மத்ரஸாக்களில் மாணவர்களின் கல்வி விருத்தியை நோக்காகக் கொண்டு கற்பிக்கப்படும் பாடசாலைக் கல்வி விதானம் மாணவர்களின் ஆளுமையையும், ஆற்றல் திறன்களையும் பரந்த அறிவையும் வளர்ப்பதற்கு பெரிதும் உதவக் கூடியதாகக் காணப்படுகின்றது. இங்கு இஸ்லாமியக் கற்கை நெறிகளும் பாடசாலைக் கல்வி விதானமும் ஒரே காலப்பகுதியில் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றமையால் மாணவர்கள் உடல், உள மற்றும் கல்வி ரீதியான பல பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கின்றனர். அத்துடன் மத்ரஸாக்களில் காணப்படும் வளப்பற்றாக்குறைகளும் மாணவர்களின் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளன. அவ்வகையில் இவ்வாய்வானது காலி மாவட்டத்திலுள்ள இப்னுஅப்பாஸ் அரபுக் கல்லூரியையும் அல்பயான் அரபுக் கல்லூரியையும் மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஓரே காலப்பகுதியில் பாடசாலைக் கல்வி விதானத்தையும் மார்க்கக் கல்வியையும் கற்றுக் கொள்வதால் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள் என்பதே **இவ்வாய்வின் பிரச்சினையாகக் காணப்படுகின்றது**. மத்ரஸா மாணவர்கள் பாடசாலைக் கல்வியைக் கற்றுக் கொள்வதிலுள்ள சவால்களையும் பிரச்சினைகளையும் இனங்காணல், பாடசாலைக் கல்வியைக் கற்றுக் கொள்வதற்குத் தேவையான வளங்களிலுள்ள வளப்பற்றாக்குறைகளை இனங்காணல், இம்மத்ரஸாக்களில் பாடசாலைக் கல்வி கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாகும். இவ்வாய்வில் பெறப்பட்ட தகவல்களின் பெறுபேறாக அறபு மத்ரஸாக்களில் இஸ்லாமியக் கற்கைநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்கள் பாடசாலைக் கல்வி விதானத்தையும் கற்றுக்கொள்வதனால் ஏற்படும் அறிவு விருத்தி, திறன்விருத்தி போன்ற நேர்மறையான தாக்கங்களும் உடல், உள மற்றும் கல்வி ரீதியான எதிர் மறையான தாக்கங்களும் இனங்காணப்பட்டன. அத்துடன் அறபு மத்ரஸாக்களில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலை கல்வி விதானத்தைக் கற்றுக்கொள்வதில் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளாக வளப்பற்றாக்குறை, மாலை நேர வகுப்புக்கள், பாடமீட்டலுக்கும் சுயகற்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் வழங்கப்பட்டிருக்கும் நேரம் போதாமை, ஆசிரியர் பற்றாக்குறை, இரு கற்கை நெறிகளையும் ஒரே காலப்பகுதியில் கற்பதனால் ஏற்படும் உடல், உள ரீதியிலான தாக்கங்கள் போன்றவை இனங்காணப்பட்டன. அறபு மத்ரஸாக்களில் மாணவர்கள் பாடசாலைக் கல்வி விதானத்தை கற்பதில் உள்ள சவால்களை இனங்காண வேண்டும். அங்கு அவர்கள் எதிர்நோக்கும் கற்றல் சார்ந்த பிரச்சினைகள் அடையாளப்படுத்தப்பட வேண்டும். போன்றன ஆய்வின் முடிவில் பரிந்துரையாக முன்வைக்கப்பட்டன.

**திறவுச்சொற்கள் :** அறபு மத்ரஸாக்கள், பாடசாலை, கல்வி விதானம், பிரச்சினைகள்.

### அறிமுகம் (Introduction)

மானிடப்பண்பாடு, பழக்கவழக்கம், கட்டுக்கோப்புகள் சட்டதிட்டங்கள், நிதிநெறிமுறை, வணக்க வழிபாடுகள் இவை அனைத்தையும் உள்ளடக்கியதாகவே இஸ்லாமிய சமயக் கல்வி அமையப் பெற்றுள்ளது. இவ்வாறான தூய கல்வியை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் தளமாக அறபு மத்ரஸாக்கள் திகழ்கின்றன. இஸ்லாமிய கற்கைநெறிகளையும், மார்க்க விளக்கங்களையும் கற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட ஓர் அமைப்பே அறபு மத்ரஸாக்களாகும். இந்நோக்கங்களை மையமாகக் கொண்டு இலங்கையில் முதன்முதலாக மத்ரஸத்துல் பாரி அறபிக் கல்லூரி உருவாக்கப்பட்டது. இவ்வாறு தோற்றம் பெற ஆரம்பித்த இவ்வறபு மத்ரஸாக்கள் இஸ்லாமிய கற்கைநெறிகளையும், மார்க்க சட்டதிட்டங்களையும் இஸ்லாமிய பண்பாடுகளையும் கற்றுத் தேர்ந்த மார்க்க அறிஞர்களை உருவாக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தொழிற்பட ஆரம்பித்தன. இம்மத்ரஸாக்களில் கற்று பட்டம் பெற்று வெளியாகக் கூடிய மாணவர்கள் இஸ்லாமிய மார்க்கத்தைக் கற்ற மார்க்க அறிஞர்களாக சமூகத்துக்கு மத்தியில் கருதப்பட்டனர்.

இலங்கையிலுள்ள இவ்வறபு மத்ரஸாக்களில் மாணவர்களின் கல்வி விருத்தியை நோக்காகக் கொண்டு பாடசாலைக் கல்வி விதானம் மத்ரஸாக்களில் கற்றுக் கொடுக்கப்பட்டு க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சைகளுக்கு மாணவர்கள் தயார்படுத்தப்படுகிறார்கள். இஸ்லாமிய கற்கைநெறிகளை கற்றுக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட இவ்வறபு மத்ரஸாக்களில் மாணவர்களின் கல்வி விருத்தியை நோக்காகக் கொண்டு பாடசாலைக் கல்வி விதானம் கற்றுக்கொடுக்கப்பட்டு க.பொ.த.சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கு மாணவர்கள் தயார்படுத்தப்படுகின்றமையால் மாணவர்கள் கற்றல் ரீதியில் பல சிரமங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கிறார்கள். இதனால் க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளில் அதிசிறந்த பெறுபேறுகளை மாணவர்களால் பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

இவ்வாய்வு காலி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு மத்ரஸாக்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்ரஸாக்களாக இப்னுஅப்பாஸ் அறபுக் கல்லூரியும், அல்பயான் அறபுக் கல்லூரியும் காணப்படுகின்றன.

### ஆய்வுப் பிரச்சினை

இஸ்லாமியக் கற்கைநெறிகளையும் மார்க்க சட்டதிட்டங்களையும் அறபு மொழியையும் கற்றுக் கொடுப்பதை அடிப்படை நோக்காகக் கொண்டு இயங்கி வருகின்ற அறபு மத்ரஸாக்களில் மாணவர்களின் கல்வி விருத்தியை நோக்காகக் கொண்டு பாடசாலைக் கல்வி விதானமும் கற்றுக்கொடுக்கப்படுகின்றது. க.பொ.த.சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கு இதனால் மாணவர்கள் தயார்படுத்தப்படுகிறார்கள். ஒரே காலப்பகுதியில் இவ்விரு கற்கைநெறிகளையும் மாணவர்கள் கற்க வேண்டியிருப்பதால் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கிறார்கள். அவ்வாறான விடயங்களை இனங்காண்பதே ஆய்வுப் பிரச்சினையாகும்.

### ஆய்வின் நோக்கங்கள் (purpose of the study)

- அறபு மத்ரஸாக்களில் மாணவர்கள் பாடசாலைக் கல்வி விதானத்தை கற்பதில் உள்ள சவால்களை இனங்காணல்.
- பாடசாலைக் கல்வியை கற்றுக் கொள்வதற்குத் தேவையான வளங்களிலுள்ள குறைபாடுகளை கண்டறிதல்.

- அறபு மத்ரஸாக்களில் பாடசாலைக் கல்வி கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்தல்.

**ஆய்வு முறையியல் (Methodology)**

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்களைப் பயன்படுத்தி அளவுசார் (Quantitative) மற்றும் பண்புசார் (Qualitative) தரவுகள் பயன்படுத்தப்பட்டு விபரண ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் நிலை பண்புத்தரவுகளாக நேர்காணல்(15), நேரடி அவதானம், குழுக் கலந்துரையாடல்(03) மூலமும் அளவியல் தரவுகளாக வினாக்கொத்துக்கள் (30) ஐக் கொண்ட மாதிரியைப் பயன்படுத்தி தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், நூல்கள், இணையத்தளம் போன்றவற்றை பயன்படுத்தி தரவுகள் திரட்டப்பட்டன. அத்தோடு முதலாம் நிலைத் தரவுகள் Excel package மூலம் எளிய புள்ளி விபரமுறையினூடாக பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வின் மையம்(Theme of Research)**


ஆய்வு பற்றிய கலந்துரையாடலும், கண்டுபிடிப்புக்களும் (Discussion and findings)

அறபு மத்ரஸாக்களில் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை கற்றுக் கொள்வதற்கு முகம் கொடுக்கின்ற சவால்கள்

இஸ்லாமிய கற்கைநெறிகளையும் அறபு மொழியையும் மார்க்க சட்டதிட்டங்களையும் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதை அடிப்படை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறபு மத்ரஸாக்கள் மாணவர்களின் எதிர்கால நலன்களையும், கல்வி விருத்தியையும், சமூக மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு பல தரப்பட்ட செயற்பாடுகளில் களமிறங்கி இருக்கின்றன. இவ்வடிப்படையில் மாணவர்களின் கல்வி விருத்தியை நோக்காகக் கொண்டு பாடசாலை, கல்வி விதானம், அறபு மத்ரஸாக்களில் கற்றுக் கொடுக்கப்பட்டு மாணவர்கள் க.பொ.த.சாதாரண தர மற்றும் உயர் தரப் பரீட்சைகளுக்கு தயார்படுத்தப்படுகிறார்கள். இவ்வாறு இரு துறை சார் கற்கை நெறிகளை மாணவர்கள் ஒரே காலப்பகுதியில் கற்கப் பணிக்கப்படுகின்றமையால் மாணவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இவ்வறபு மத்ரஸாக்களில் இஸ்லாமியக் கற்கைநெறிகளும் அறபுப்பாடங்களும் காலைநேர வகுப்புகளில் கற்பிக்கப்படுவதுடன் பாடசாலைப் பாடங்கள் அதிகமாக மாலைநேர வகுப்புகளிலே இடம்பெறுகின்றன. 74 சதவீதமான பாடசாலைப்பாட நேரங்கள் மாலைநேர வகுப்புகளிலேயே கற்பிக்கப்படுகின்றன. மாலைநேரங்களில் இடம்பெறும் இவ்வகுப்புக்களில் வினைத்திறனாகவும், சுறுசுறுப்பாகவும் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் காணமுடியாதுள்ளது. இந்நேரங்களில் மாணவர்கள் ஓய்வாக இருப்பதையும் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் அதிகம் விரும்பக் கூடியவர்களாக உள்ளனர். எனவே மாலைநேர வகுப்புகள் பாடசாலைக் கல்வியை கற்றுக் கொள்வதற்கு உகந்த நேரமாக அமையவில்லை.

மாணவர்கள் அவர்களுக்கு கற்றுக் கொள்ளத் தேவையென கருதுகின்ற பாடங்களை வெளியே சென்று மேலதிக வகுப்புகளில் சிறந்த ஆசிரியர்களிடம் கற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இதற்கு அறபு மத்ரஸா கட்டமைப்பே தடையாக உள்ளது. எனவே மாணவர்கள் மத்ரஸா சூழலில் கற்பிக்கப்படும் பாடங்களை மாத்திரம் படித்தே பரீட்சைக்குத் தயாராக வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். அங்கு கற்பிக்கப்படும் பாடங்கள் சிறந்த முறையில் ஆசிரியர்களால் கற்பிக்கப்படவில்லையென்றால் மாணவர்களின் கல்வியிலும், பரீட்சைகளிலும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.




இவ்வறபு மத்ரஸாக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு குறைவாகவே ஓய்வு நேரங்கள் வழங்கப்படுகின்றன. சுயகற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், பாடப் பயிற்சிகளை செய்து பார்ப்பதற்கும், கற்ற பாடங்களில் மீட்டல்களை மேற்கொள்வதற்கும் போதியளவு நேரம் கிடைக்கப் பெறாமையினால் கற்பதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். மாணவர்கள் அறபுப் பாடங்களில் நாளாந்தம் மீட்டல்களை மேற்கொள்ள வேண்டியவர்களாகவே இருக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுவதனால் ஏனைய பாடங்களில் மீட்டல்களை மேற்கொள்வதில் கவணக்குறைவு செய்கின்றனர். இதனால் அவர்களின் கல்வி நடவடிக்கை பாதிப்படைகின்றது.

மேலும் பல பாடப்பரப்புகளை ஒரே காலப்பகுதியில் கற்கவேண்டியவர்களாக இருப்பதனால் மனஅழுத்தம் போன்ற உளப்பாதிப்புகளுக்கும், களைப்பு, சோர்வு போன்ற உடலியல் தாக்கங்களுக்கும் மாணவர்கள் உள்ளாகின்றனர்.

**பாடசாலை கல்வி விதானத்தை கற்றுக் கொள்வதற்கு தேவையான வளங்களில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிதல்.**

கல்வியை சிறந்க முறையில் கற்றுக்கொள்வதற்கு தேவையான வளங்களில் காணப்படும் குறைபாடுகள் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும். தேவையான வளங்கள் தேவைப்படுகின்ற காலங்களில் கிடைக்கப்பெறாவிடின் கல்வியில் சிறந்க மாற்றத்தை மாணவர்களிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது. மாணவர்கள் உரிய வளங்களை கற்றலுக்கு தேவைப்படுகின்ற காலங்களில் உரிய முறையில் பெற்றுக்கொள்வதன் மூலமே வினைத்திறனான முறையில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். அரபு மத்ரஸாக்களில் காணப்படும் வளங்களிலுள்ள குறைபாடுகள் பல்வேறு கோணங்களில் மாணவர்களின் கல்வியில் தாக்கம் செலுத்துகின்றன.

அறபு மத்ரஸாக்களில் பாடசாலை கல்வியை கற்பிக்கும் ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. இம்மத்ரஸாக்களுக்கு கல்வி கற்பிப்பதற்காகச்செல்லும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அதிகூடிய வேலைப்பழுவும் குறைவான சம்பளமும் இப்பற்றாக்குறை நிலவுவதற்கு முக்கிய காரணமாகும்.

இவ்வறபு மத்ரஸாக்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக செல்லும் ஆசிரியர்கள் குறுகிய பாடவேளைகளில் முழுப் பாடசாலைக்கல்வி விதானத்தையும் மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டியவர்களாக காணப்படுகின்றனர். இம் மத்ரஸா மாணவர்களுக்கு பாடசாலைக்கல்வியை கற்றுக்கொள்வதற்கு குறைவான பாடவேலைகளே தரப்படுகின்றன. இக்குறைவான பாடவேளைகளில் முழுப்பாடப்பரப்புக்களையும் பூர்த்தி செய்து மாணவர்களை பரீட்சைக்கு தயார்படுத்துவது ஆசிரியர்களுக்கு சிரமமான காரியமாகக் காணப்படுகிறது.

பாடசாலைக் கல்வி விதானம் கற்றுக் கொடுக்கப்படும் இவ்வறபு மத்ரஸாக்களில் மாணவர்கள் ஆய்வு நடவடிக்கைகளிலும் பரிசோதனைகளிலும் ஈடுபடுவதற்கான சிறந்த ஆய்வுகூட வசதிகள் இல்லாமல் இருக்கின்றது இதனால் விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்பதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். மாணவர்கள் பாடசாலை கல்வியை கற்றுக்கொள்வதற்கான புத்தகங்களை அரச பாடசாலைகளில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். அல்லது பணத்திற்கு புத்தகங்களை வாங்க வேண்டிய நிலைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதனால் பாடப்புத்தகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்றது. பாடப்புத்தகங்களில் காணப்படும் தட்டுப்பாடு மாணவர்களின் கல்வி நடவடிக்கையை பாதிக்கின்றன. இதன் காரணமாக உரிய நேரங்களில் மாணவர்கள் பாடமீட்டல்களை சிறந்த முறையில் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இப்பற்றாக்குறை மாணவர்கள் பெறுபேற்றிலும் தாக்கம் செலுத்துகின்றது.

**அறபு மத்ரஸாக்களில் பாடசாலைக் கல்வியை கற்றுக்கொடுப்பதன் அவசியம்.**

மாணவர்களுக்கு மத்தியில் பரந்த அறிவையும் சிறந்க ஆளுமைப்பண்புகளையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு பாடசாலைக் கல்வி விதானம் கற்பிக்கப்படுகின்றது. மார்க்க சட்டதிட்டங்களை கற்ற மார்க்க அறிஞர்களை உருவாக்கும் இவ்வறபு மத்ரஸாக்களில் பாடசாலை கல்வி கற்றுக்கொடுக்கப்படுகின்றமையால் சமூக பிரச்சினைகளை புத்திசாதூரியனமான முறையில் எதிர் கொள்ளக்கூடிய சிறந்த அறிஞர்களை உருவாக்க முடியும். கற்றால் மற்றும் போதாது அதன்படி வாழப்பழக வேண்டும் என்பது அறநெறிக்கல்வியின் அடிப்படை நோக்கமாகும். இதன்படி மனித விழுமியங்களை வளர்த்தெடுப்பதில் சமயக்கல்வியானது கணிசமான செல்வாக்கை செலுத்துகின்றது. இவ்வாரான சமயக்கல்வியை கற்கும் அறபு மத்ரஸா மாணவர்களுக்கு பாடசாலை கல்வியை வழங்குவதன் மூலம் தற்காலத்துக்கு தேவையான சிறந்த தலைமைத்துவ மற்றும் ஆளுமைப்பண்புள்ள அறிஞர்களை உருவாக்கலாம். இவ்வாறு கற்றறிந்த அறிஞர்களால் மாத்திரமே பலதரப்பட்ட கல்விமட்டங்களில் காணப்படக்கூடிய சமூகத்தை சிறந்த முறையில் வழிநடாத்தி சமூகத்திற்கு மத்தியில் தாண்டவமாடும் சமூகப்பிரச்சனைகளை இலகுவாக தீர்த்து வைக்கலாம்.

**முடிவுரை (Conclusion)**

இவ்வாய்வின் மூலம் காலி மாவட்டத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இரு அறபு மத்ரஸாக்களில் மாணவர்கள் பாடசாலைக்கல்வியை கற்பதில் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் சவால்களும் இனங்காணப்பட்டன. இவ்வாய்வுகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட இவ்விரு மத்ரஸாக்களும் காலி மாவட்டத்தில் பிரசித்தி பெற்று விழங்கக்கூடிய சிறந்த அறபு மத்ரஸாக்களாகும். இவ்வாய்வின் மூலம் அறபு மத்ரஸாக்களில் கற்கும் மாணவர்கள் பாடசாலைக்கல்வியை கற்பதில் எதிர் நோக்குகின்ற பிரச்சனையாக ஆசிரியர் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை, மாலை நேர வகுப்புக்கள் பாடமீட்டல்களுக்கும் சுயகற்கைகளுக்கும் வழங்கப்பட்டிருக்கும் நேரம் போதுமானதாக காணப்படாமை, இரு கற்கை நெறிகளை ஒரே காலப்பகுதியில் மேற்கொள்ளவேண்டியிருப்பதனால் ஏற்படும் உடல், உள ரீதியான தாக்கங்கள் போன்றவை இனங்கானப்பட்டன. இம்மத்ரஸா

நிருவாகிகளும், ஆசிரியர்களும், புத்திஜீவிகளும் இவ்வாறான மாணவர்களின் பிரச்சனைகளை அடையாளம் கண்டு அதற்கான மாற்றீடுகளை செய்து அறபு மத்ரஸாக்களின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட வேண்டும் என்று இவ்வாய்வின் முடிவில் பரிந்துரையாக முன்வைக்கப்படுகின்றது.

**உசாத்துணைப் பட்டியல்( References)**


- Http://ibnuabbas.org
- இப்னு அப்பாஸ் அரபுக்கல்லூரி வெளியீடு 2015- திக்ரா காலாண்டு சஞ்சிகை
- அனஸ் ஏ.ஜே.ஆ தற்கால இஸ்லாமிய சிந்தனை(2007)